

தமிழகத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மீண்டும் நல்லாட்சி தொடரவேண்டுமென தமிழக மக்கள் விரும்புகிறார்கள் என்று தாடிக்கொம்பு பேரூராட்சியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, தி.மு.க. வளர்த்த கிராமங்களில் தாடிக்கொம்பு முதன் மையானது என்றார். தொடர்ந்து அப்பகுதியில் பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அருகில் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற தலைவர் கவிதா சின்னத்தம்பி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சிவகாசி சட்டமன்றத் தொகுதிக்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் அசோகனை ஆதரித்து, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பொது மக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரித்தார். உடன் மாநகரச் செயலாளர் உதயசூரியன், மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் இருந்தனர்.



முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் கமுதி மத்திய ஒன்றியத்தில் பேரையூர் பீட்டர் புரம் சங்கரப்பன்பட்டி, கீழவலசை,செங்கப்படை பம்புலி நாயக்கன்பட்டி இடையங்குளம் மற்றும் மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல் ஒன்றிய செயலாளர் சண்முகநாதன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் பெருநாழி போஸ், காரைக்குடி மண்டல தொ.மு.ச. பேரவை செயலாளர் பச்சைமால் உட்பட கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் போது மாற்றுக் கட்சிகளில் இருந்து இணைந்த நிர்வாகிகளை அமைச்சர் வரவேற்றார் .



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேரையூர் பகுதிகளில் கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.வை ஆதரித்து கழக துணை பொதுச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க.குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட ராயகிரியில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வெற்றி வேட்பாளர் பெ.கீதாஜீவன் தூத்துக்குடி மாநகரில் 24, 25 மற்றும் 26 ஆகிய வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் தி.மு.க. தலைவர் மு க ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். நிகழ்வில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் ஏ.பி.சி.வி. சண்முகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகரச் செயலாளர் தனலட்சுமி, மதிமுக மாநகர செயலாளர் முருக பூபதி, தேமுதிக மாவட்டச் செயலாளர் தயாளலிங்கம், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் யூசுப், மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், துணை செயலாளர் ராஜமோகன் செல்வின், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி 16 புதூர் ஊராட்சியில் அமைச்சர் அர. சக்கரபாணி வாக்குகள் சேகரித்து பொதுமக்களிடம் பேசினார்.



மதுரை மாவட்டம் மேலூரில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மேலூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் விஸ்வநாதனை அறிமுகப்படுத்தி கை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டுமென மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் ஆனந்த், கருதியாகராஜன், நூர் முகமது, முகமது யாசின் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.